ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2302/17 - 2022 ඔක්තෝබර් මස 19 වැනි බදාදා - 2022.10.19
2302/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

*ச. வ. பீ. - 21/78(X) (ஈ)*

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் கீழ் தாபிக்கப்பட்டதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட கொழும்பு 07, மலலசேகர மாவத்தை, 30அ இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இலங்கைப் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2013 மாச்சு 12 ஆந் திகதிய 1801/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற சுருக்கப்பெயர்களுக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “பிரயோகக் கணக்கியலில் விஞ்ஞான இளமானி (சிறப்பு)” மற்றும் “பிரயோகக் கணக்கியலில் விஞ்ஞான இளமானி (பொது)” என்னும் பட்டத்தின் பெயருக்குப் பதிலாகப் பின்வரும் பட்டத்தின் பெயர்கள் மற்றும் சுருக்கப் பெயர்களை முறையே இடுவதன் மூலம் திருத்துகின்றேன்.*

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| கௌரவ பிரயோகக் கணக்கியல் இளமானி | பிஏஏ கௌரவ |
| பிரயோகக் கணக்கியல் இளமானி | பிஏஏ |

*கலாநிதி* ***ஏ. டி. சுசில் பிரேமஜயந்த (பா. உ.),***
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஒற்றோபர் 17.*

EOG *10 - 0173/1*

1A - PG 6012 — 286 (2022/10)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*ச. வ. பீ. - 21/78(X) (ஆ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 1437 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் கொழும்பு 04, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை, டி கிரெட்சர் இடத்தில், 36 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளதுமான இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2020 செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2194/72 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "வணிக முகாமைத்துவத்தில் கௌரவ இளமானி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிட்டெட், குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் (SLQF Level6) மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமானி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் -

    (அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரத்தில்) பௌதீக விஞ்ஞான பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

    (ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கபொத (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் (S).

2. இன்டநஷனல் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் அன்ட் டெக்னொலொஜி லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| மென்பொருள் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமானி | பிஎஸ்சி கௌரவ (மென்பொருள் பொறியியல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த (பா. உ.),**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 17.

EOG 10 - 0173/2

*ச. வ. பி. 21/1978*(X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

*25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட* GL *24 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான இலங்கை தகவல் தொழினுட்பவியல் நிறுவகம் (உத்தரவாதம்) தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும், 2022 ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 2273/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான* II *ஆம் அட்டவணையை அதற்கான நிரல்* I *இல் காணப்படும் "தகவல் தொழினுட்பவியலில் கௌரவ கல்வியியல் இளமானி" என்னும் பதிவையும் நிரல்* II *இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை* II *இன் முறையே நிரல்* I *இன் கீழும் நிரல்* II *இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. இலங்கை தகவல் தொழினுட்பவியல் நிறுவகம் (உத்தரவாதம்) ஆனது, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது-

   (அ) குறைந்தபட்சம் 120 திறமை மதிப்பீடுகளுடன் (இலங்கை தகைமைக் கட்டமைப்பு மட்டம் 6), கணனி முறைமைப் பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமானி தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கபொத (உயர்தரப்) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானத் துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் இரண்டு (2) திறமைச் சித்திகள் (C) மற்றும் ஒரு (1) சாதாரண சித்தி (S) குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்;

   (ஆ) வணிக நிர்வாகத்தில் கலாநிதி தொடர்பில், இலங்கை தகைமைக் கட்டமைப்பு மட்டத்தில் (SLQF) குறித்துரைக்கப்பட்டவாறு பின்வரும் ஏதேனும் ஒரு ஆகக்குறைந்த நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

      (i) வணிக அல்லது ஏதேனும் துறையில் முதுதத்துவமானி பட்டம்; அல்லது

      (ii) SLQF இன் 9 மற்றும் 10 ஆம் மட்டம் அல்லது அதற்குச் சமனான ஆய்வுப் புலமைச் சான்றுகளுடனான வணிகம் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏனைய துறைகளிலான முதுமானி பட்டம்; அல்லது

      (iii) ஆய்வுப் புலமைச் சான்றுகளுடனான வணிகம் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏனைய துறைகளில் 0-4.0 வரையிலான அளவீடுகளில் ஆகக்குறைந்தது 3.7 தரச்சராசரிப்புள்ளிகளுடனான SLQF மட்டம் 6 இலான கௌரவ இளமானி பட்டம்; அல்லது

      (iv) குறித்த நபரது ஆய்வுப் புலமை அதிவிசேட தரத்தில் காணப்படுவதைக் காட்டும் ஒரு தத்துவமானி பட்டத்திற்கான பதிவு உறுதிப்படுத்தப்பட்டு குறைந்தது 18 மாதங்களுக்குப் பின்னர் வணிகம் அல்லது அதனுடன் தொடர்புடைய ஏனைய துறைகளில் கலாநிதி பட்டம் வரையில் மேற்செல்லக்கூடியவாறு முதுதத்துவமானி பட்டத்திற்காக பதிவு செய்துள்ள நபர் கொண்டுள்ள SLQF மட்டம் 6 அல்லது அதற்குச் சமனான கௌரவ இளமானி பட்டம்.

2. ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| நிரல் I<br>பட்டம் | நிரல் II<br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| கணினி முறைமை பொறியியலில் கௌரவ விஞ்ஞான இளமானி | பிஎஸ்சீ கௌரவ (கணினி முறைமை பொறியியல்) |
| வணிக நிர்வாகத்தில் கலாநிதி | பிஎச்டி (வணிக நிர்வாகம்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த (பா. உ.)**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 17.

EOG 10 - 0173/3

---

ச. வ. பி. 21/1978(X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 4833 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மனேஜ்மென்ட் லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, அதன் I ஆம் நிரலிலும் மற்றும் II ஆம் நிரலிலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படும் “முகாமைத்துவத்தில் தத்துவவியல் கலாநிதி” என்னும் பதிவை உடனடுத்து முறையே இதற்கான II ஆம் அட்டவணையின் நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளை இதற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய சேர்ப்பதன் மூலம் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதிய 2294/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை இக்கட்டளையால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

**நிபந்தனைகள்**

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மனேஜ்மென்ட் லிமிட்டெட் தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது,

    (i) குறைந்தபட்சம் 120 திறமை மட்டங்களுடன் (இதச மட்டம் 6) பூர்த்திசெய்த வியாபாரப் பகுப்பாய்வில் கௌரவ முகாமைத்துவ இளமாணி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் -

        (அ) இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் வணிகப் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்குச் சமமான தகைமைகள்; அல்லது

        (ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட இணைக்கும் கற்கைநெறியுடன் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கபொத (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரணச் சித்திகள் (S).

(ii) குறைந்தபட்சம் 120 திறமை மட்டங்களுடன் (இதச மட்டம் 6) பூர்த்திசெய்த பிரயோகப் பொருளியலில் கௌரவ முகாமைத்துவ இளமானி பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்காக இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே மற்றும் அதே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மனேஜ்மென்ட் லிமிட்டெட் குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| வியாபாரப் பகுப்பாய்வில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி கௌரவ (வணிகப் பகுப்பாய்வு) |
| பிரயோகப் பொருளியலில் கௌரவ முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி கௌரவ (பிரயோகப் பொருளியல்) |

கலாநிதி **டி. ஏ. சுசில் பிரேமஜயந்த (பா. உ.)**,
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 17.

EOG 10 - 0173/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.